# மேல்நிலைக்கல்வி

# தமிழ் (304)

# இடுபணி (TMA)

**மதிப்பெண் : 20**

**குறிப்பு :** 1. எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்கவும்.

2. பெயர், சுழல் எண், (ஒப்படைப்பு எண்) இடுபணி எண் மற்றும் பாட எண்களை

விடைத்தாளின் முதல் பக்க முகப்புப் பகுதியில் எழுதுக.

**அ. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு**
**(40 முதல் 60 சொற்களுக்கு மிகாமல்) குறுகிய விடையளிக்க** (1 x 2 = 2)

1. தமிழ் என் உயிரினும் மேலானது என்று, பாரதிதாசன் கூறும் கருத்துக்களை எழுதுக.
   (விடை : பக்கம் : 6 ; தொகுதி : 1)
2. கவிஞர் ‘இன்குலாப்’ சிறைச்சாலை குறித்துச் சிந்திக்க வேண்டிய செய்திகளாகக் கூறுவன யாவை?
   (விடை : பக்: 28; தொகுதி : 1)
3. மகனை இழந்த தாய் புத்தரிடம் புலம்புவதை கவிமணி எவ்வாறு எடுத்துரைக்கின்றார்?
   (விடை : பக்: 42; தொகுதி : 1)
4. நாலடியார் பொருள் செல்வம் நிலையானது அன்று என்பதை எவ்வாறு விளக்குகின்றது?
   (விடை : பக்: 85; தொகுதி : 1)

**ஆ. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு**
**(40 முதல் 60 சொற்களுக்கு மிகாமல்) குறுகிய விடையளிக்க** (1 x 2 = 2)

1. தெனாலிராமன் (அரசின் செலவுகளைத் தவிர்க்க) பூனையைக் கொண்டு உணர்த்திய நீதியை எழுதுக.
   (விடை : பக்கம் : 131; தொகுதி : 1)
2. நாட்டுப்புற இசை, செவ்வியல் இசை - விளக்குக.
   (விடை : பக்கம் : 154 ; தொகுதி : 1)
3. பதினெண் மேற்கணக்கு நூல்களை எழுதுக.
   (விடை : பக்கம் : 167 ; தொகுதி : 1)
4. பிறமொழிச் சொற்கள் தமிழில் வழங்கக் காரணம் கூறி தமிழில் கலந்துள்ள சொற்கள் சிலவற்றைப் பட்டியலிடுக.
   (விடை : பக்கம் : 175 ; தொகுதி : 1)

**இ. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு**

**(40 முதல் 60 சொற்களுக்கு மிகாமல்) குறுகிய விடையளிக்க** (1 x 2 = 2)

1. தமிழகத்தில் உள்ள சிறப்புமிகு நூலகங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
   (விடை : பக்கம் : 200; தொகுதி : 1)
2. "சாயாவனம்" - புதினத்தில் வெட்ட இயலாத மரங்களைச் சிதம்பரம் எவ்வாறு அழித்ததாகக் கூறப்பட்டுள்ளது?
   (விடை : பக்கம் : 221; தொகுதி : 1)
3. மண் மாசுபடுதலைத் தடுக்கும் வழிகளை எழுதுக.
   (விடை : பக்கம் : 250; தொகுதி : 1)
4. வேலை வேண்டி விண்ணப்பம் எவ்வாறு அமைதல் வேண்டும்?
   (விடை : பக்கம் : 195; தொகுதி : 1)

**ஈ. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு**

**(100 முதல் 150 சொற்களுக்கு மிகாமல்) குறுகிய விடையளிக்க** (1 x 4 = 4)

1. பிரான் சாத்தனார் இயற்றியுள்ள நற்றிணைப் பாடலில் தோழியின் கடமை உணர்வும் பெண்ணுரிமை குறித்த செய்தியும் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?
   (விடை : பக்கம் : 18; தொகுதி : 2)
2. முனைவர் சோ.ந.கந்தசாமி தரும் பண்பாடு பற்றிய விளக்கங்களைத் தொகுத்து எழுதுக.
   (விடை : பக்கம் : 61; தொகுதி : 2)
3. 'வரலாற்றுச் சின்னம்' - என்னும் கட்டுரையில் சுந்தரர் வரலாற்றோடு தொடர்புடைய காட்சிகள் எவ்வாறு காட்டப்பட்டுள்ளன?
   (விடை : பக்கம் : 74; தொகுதி : 2)
4. சிறுகதை குறித்த விளக்கத்தையும், அதன் உறுப்புகளையும் எழுதுக.
   (விடை : பக்கம் : 52, 53; தொகுதி : 2)

**உ. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு**

**(100 முதல் 150 சொற்களுக்கு மிகாமல்) குறுகிய விடையளிக்க** (1 x 4 = 4)

1. நவீன வாழ்வின் ஓர் அங்கம் 'கணினி' என்பதனைச் சுருக்கமாக எழுதுக.
   (விடை : பக்கம் : 99; தொகுதி : 2)
2. இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் குறித்து எழுதுக.
   (விடை : பக்கம் : 121; தொகுதி : 2)
3. மென்பொருள்களில் 'விசைப்பலகை இயக்கி' குறித்து எழுதுக.
   (விடை : பக்கம் : 147; தொகுதி : 2)
4. முகவர்கள் எந்தெந்த ஆற்றல் பெற்று விளங்க வேண்டும்?
   (விடை : பக்கம் : 154; தொகுதி : 2)

**ஊ. ஏதேனும் ஒரு தலைப்பில் (500 சொற்களுக்கு மிகாமல்)**

**செயல்திட்டத்தினை எழுதுக.** (1 x 6 = 6)

1. ஒரு நிறுவனத்தின் மேலாளராக உங்களை நியமித்தால் எவ்வாறு செயல்படுவீர் - விவரி
(விடை : பார்வைக்கு பக்கம் : 158 ; தொகுதி : 2)

2. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ‘உதவி வேண்டி’ செய்தித்தாளுக்கு ஒரு விளம்பரம் தருக.
(விடை : பாடம் சார்ந்த பொதுவிடை)

3. செல்பேசியின் நன்மை தீமைகளை விளக்கும் உரையாடல் ஒன்றைத் தயார் செய்க.

4. உடல் நலிவால் பள்ளிக்கல்வியைப் பாதியிலேயே விட்ட ஒருவன், தேசியத் திறந்த வெளிப் பள்ளி மூலம் கற்று உயர் பதவியில் அமர்ந்துள்ளமை என்ற குறிப்பினை அடிப்படையாகக் கொண்டு சிறுகதை எழுதுக.